DEPOSITION OF WITNESS
---
IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 46/2022 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | சந்தோஷ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.01.2025

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. முதல் தகவல் அறிக்கை (**ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

2. Accident Register & Wound Certificate (**ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

3. M.V.I Report TN 63 AR 8812 இருசக்கர வாகனம் M.V.I Report TN 63 AR 7966 TATA Indica Car (**ம.சா.ஆ. 3ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

4. பார்வை மகஜர் (**ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

5. வரைபடம் **(ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

6.குற்ற இறுதி அறிக்கை **(ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

7.Judgment **(ம.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

8.Discharge summary (KMC Hospital) D.O.A 28.01.2021 to D.O.D 02.02.2021 **(ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

9.22.07.2022 தேதியிட்ட Aarthi Scans and Lab MRI Brain Report **(ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

10.Discharge summary ( Sri Ramachandra Hospital) D.O.A 27.07.2022 to D.O.D 09.08.2022 **(ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

11.ரூ.55,723/-ற்கான KMC மருத்துவமனை பில்கள் (ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

12.ரூ.8,002/-ற்கான Neuro One Hospital Bills **(ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

13.ரூ.31,969/-ற்கான Sri Ramachandra Hospital In-Patient Bills **(ம.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

14.ரூ.2,935/-ற்கான Sri Ramachandra Hospital Pharmacy Bills **(ம.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**15.** மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **ம.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

**1.** நான் விபத்து சமயத்தில் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் TN 63 AR 8812 யாருக்கு சொந்தம் என்றால் எனது அப்பாவிற்கு சொந்தமானது. அந்த வாகனத்திற்கு விபத்து சமயத்தில் காப்பீடு இல்லை என்றால் சரிதான். விபத்து நடைபெறும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் காலை சுமார் 05.45 மணி இருக்கும். விபத்து நடந்த இடத்தில் தெரு விளக்கு எதுவும் கிடையாது என்றால் சரிதான். அப்போது சூரியஒளி இல்லை என்றால் சரிதான். விபத்து நடந்த சாலையில்நான் எந்த திசையில் இருந்து எந்த திசையை நோக்கி சென்றேன் என்றால் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் சென்றேன். விபத்து நடந்த சாலையானது Y வளைவுள்ள சாலை என்றால் சரிதான். மேற்படி சாலையில் நான் இடது புறமாக சென்று கொண்டிருந்தேனா என்றால் ஆமாம். என்மீது மோதியதாக சொல்லப்படும் கார் ஆனது எதிர் திசையில் சாலையின் இடதுபுறமாக வந்துகொண்டிருந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் இரண்டு சாலைகள் சந்திக்கும் இடம் என்றால் சரிதான். இரண்டு சாலைகள் சந்திக்கும் இடத்தின் மத்தியபகுதியில் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

2. நான் விபத்து சமயத்தில் திடீரென வலதுபுறமாக இருக்கும் சாலையில் ஏறிச்செல்லும்போதுதான் விபத்து ஏற்பட்டதா என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எதிரே வரும் வாகனத்தை கவனிக்காமல் நான் அதிவேகமாவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவுதான் காரணம் என்றால் சரியல்ல. இந்த விபத்தினால் என்னுடைய தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான், தலையின் பின்புறம் மண்டையில் காயம் ஏற்பட்டது. விபத்து சமயத்தில் நாங்கள் இருவரும் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல, இருவரும் அணிந்திருந்தோம். இந்த விபத்து

சம்மந்தமாக யார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் என்னுடைய தந்தை புகார் கொடுத்தார்.

3. நான் விபத்து நடந்தவிதம் குறித்து என் தந்தையிடம் சொன்னதன் அடிப்படையில் அவர் புகார் கொடுத்தாரா என்றால் ஆமாம். விபத்து நடந்தவிதம் குறித்து என் தந்தையிடம் சொல்லும்போது நானும், என் பின்னால் அமர்ந்திருந்தவரும் தலைக்கவசம் அணிந்திருந்த விபரம் சொன்னேனா என்றால் சொன்னேன். என்னுடைய இழப்பீட்டு மனுவிலோ, நிரூபணவாக்குமூலத்திலோ நானும் என் பின்னால் அணிந்திருந்தவரும் தலைக்கவசம் அணிந்திருந்ததாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான், ஆனால் அணிந்திருந்தேன்.

4. நான் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்திருந்தால் எனக்கு தலையில் காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றும், தலைக்கவசம் அணிந்ததிருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் 2022ம் ஆண்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்பு தொடர் சிகிச்சை எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, சிகிச்சை எடுத்து வருகிறேன். நான் தொடர் சிகிச்சை எடுத்துவந்திருந்தால் மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றும், சிகிச்சை எடுக்கவில்லை என்பதால் தான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, அவை தேவைப்படுவதால் தாக்கல் செய்யவில்லை.

5. நான் தற்போது என்ன படித்துவருகிறேன் என்றால், நான் படித்துமுடித்துவிட்டு வீட்டில்தான் இருந்துவருகிறேன். வேலைக்கு என்னால் செல்லமுடியவில்லை. நான் தற்பொழுது இருசக்கர வாகனம் ஓட்ட முடியுமா என்றால், என்னால் ஓட்டமுடியாது. நான் கேட்ட கேள்வி அனைத்தும் நான் புரிந்துகொண்டுதான் பதில் அளித்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயம் அனைத்தும் குணமாகிவிட்டது என்றும் அதனால் எனக்கு எவ்வித ஊனமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல, நான் தற்பொழுது வரை சிகிச்சை மேற்கொண்டுதான் வருகிறேன். தற்பொழுதுவரையில் என் வலது காதில் மெசின் வைக்கமுடியவில்லை, உள்காயங்கள் இருப்பதால் வைக்கமுடியவில்லை. நான் விபத்து சமயத்தில் கல்லூரியில் படித்து வந்தேன் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவுதான் காரணம் என்றும், அதனால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு எதுவும் கொடுக்ககடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லுவதுபோல் எனக்கு எந்தவித ஊனமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

6. நான் பல்வேறு தலைப்பின்கீழ் இழப்பீட்டுத் தொகையை மிகைப்படுத்தி கேட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்ததால் எனக்கு எவ்விதமான வருமான இழப்பும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**(3ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் செய்த குறுக்குவிசாரணை 1, 2 எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது).**

| |
|---|
| சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.<br><br>(ஒம்)- திருமதி.P.கலை நிலா, M.L.,<br>சார்பு நீதிபதி,<br>தேவகோட்டை. |